## வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனி – 2017/2018

வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 கம்பனியைத் தோற்றுவித்தலும் உரிமையும்

வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனியானது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் 2008 செப்தெம்பர் 19 ஆந் திகதி உருவாக்ககப்பட்ட

ஒரு வரையறுக்கப்பட்ட கம்பனியாவதுடன் உரிமையான்மையில் 51 சதவீதம் அரசாங்கத்திற்குச் சொந்தமாகும்.

**1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) 2006 / 2007 ஆம் ஆண்டிலிருந்து கம்பனி நட்டமடைந்து செயற்படுவதுடன் அந்த ஆண்டின் போது ரூபா 219 மில்லியனான நட்டம் 10 ஆண்டுகளின் பின்னர் மீளாய்வாண்டளவில் ரூபா 1,352 மில்லியன் வரை 517 சதவீத அளவால் விரைவாக அதிகரித்திருந்தது. மேலும், 2016/2017 நிதி ஆண்டு இறுதியளவில் கம்பனியின் மொத்த சொத்துக்களை மிகைத்துச் சென்ற கடன் ரூபா 3,064,962,691 ஆக இருந்ததுடன் அது 2017/2018 நிதி ஆண்டின் இறுதியில் ரூபா 4,417,401,944 வரை அதாவது 44 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. கம்பனியால் தொழிற்பாட்டு மூலதன தேவைப்பாட்டை பூர்த்தி செய்து கொள்வதற்குத் தேவையான நிதி தமது தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்தும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் 15 சதவீதத்திலிருந்து 28 சதவீதம் வரையான அதிக வட்டி வீதத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த கடன் மற்றும் குத்தகைகளின் பெறுமதி ரூபா 6,759,118,270 ஆகும். எவ்வாறாயினும், இக்கடனுக்காக மீளாய்வாண்டிற்கான கடன் வட்டி செலவு ரூபா 1,193,519,762 ஆக இருந்ததுடன் அக்கடனை தீர்த்து வைக்கக் கூடிய அளவு வருமானத்தை தொழிற்சாலைகளிலிருந்து உருவாக்கி கொள்வதற்கு கம்பனிக்கு முடியாதிருந்ததுடன் அதற்கிணங்க கம்பனிக்கு ஏற்பட்டுள்ள இந்நிதிச் சிக்கல்களின் காரணமாக கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் நிச்சயமற்றதாக இருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 19(இ) ஆம் பந்தியின் பிரகாரம் நிர்வாக மற்றும் ஏனைய பொதுச் செயற்பாட்டுக் கிரயத்தை ஆதனம், பொறி, உபகரணம் மற்றும் கட்டிடங்களின் கிரயத்திற்குள் உள்ளடக்க முடியாது என்ற போதிலும் ரூபா 95,977,641 தொகையான நிர்வாக மற்றும் பொதுச் செயற்பாட்டுக் கிரயமானது ஆதனம் பொறி, உபகரணம் மற்றும் கட்டிடங்களின் பெறுமதிக்குள் மூலதனாமாக்கப்பட்டிருந்ததனால் கம்பனியின் மதுபானசாலை மற்றும் கட்டிடங்களின் பெறுமதி அப் பெறுமதியால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் விளைதிறனான ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூபா 78,883,433 பெறுமதியான ஆதனம், பொறி, உபகரணம் என்பன தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க அவற்றின் விளைதிறன் ஆயுட் காலத்தை மீண்டும் மீளாய்வு செய்வதற்கு அல்லது மீள்மதிப்புச் செய்து மீண்டும் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்களானவை வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் பணிக்கப்பட்டவாறு நான் பின்வரும் விடயங்களைத் தருகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்விற்கான நோக்கெல்லையும் மற்றும் மட்டுப்படுத்தல்களும் மேலே தரப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு முக்கியமான மட்டுப்படுத்தல்களுக்கு உட்பட்டு கணக்காய்விற்குத் தேவையான தகவல்களுகம் விளக்கமளித்தல்களும் போதியளவில் கிடைத்துள்ளது எனவும் எனது பரிசோதனைகளிலிருந்து தென்படும் அளவில் கம்பனியால் போதியளவான ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்பட்டுள்ளன எனவும்,

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ளது எனவும் எனது அபிப்பிராயமாகும்.

(இ) கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 220 ஆம் பிரிவில் பணிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

ஒரு ஆண்டிற்கு மேற்பட்டு காலமாக கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 4,014,912 மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் சீனி உற்பத்திச் தொழிற்சாலைகளுக்காக சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அவ்வாறு உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 1,352,439,253 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 956,794,464 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 395,644,789 வீழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிக் கிரயம் ரூபா 446,103,282 ஆல் அல்லது 60 சதவீதத்தால் அதிகரித்தல் மேற்கூறிய நிதிவிளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் 2016/2017 ஆம் ஆண்டின் போது 0.29:1 ஆக இருந்தும் 2017/2018 ஆம் ஆண்டளவில் அது 0.26:1 வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பனியின் தேறிய நட்ட விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 95 சதவீதத்திலிருந்து 109 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(இ) கம்பனியின் திரவ விகிதத்தை 2016/2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.97 சதவீதத்திலிருந்து 2.22 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் முழுப் பொறுப்புக்களையும் ஈடுசெய்வதற்குப் போதியவையான மொத்த சொத்துக்கள் நிறுவனத்திடம் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு நடவடிக்கைகள்

### 4.1 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முகாமைத்துவ உடன்படிக்கையின் மூலம் கம்பனியின் 49 சதவீதமான உரிமையைக் கொண்டுள்ள லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனி மற்றும் பிரவுன்ஸ் கம்பனியின் கீழ் காணப்படுகின்ற கல்ஓயா ஹோல்டிங்ஸ் கம்பனிக்கு 2010 ஏப்ரல் 26 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. கம்பனியில் தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற நிதிச் சிக்கல் நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கும் செயலாற்றலை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு எடுத்த 08 ஆண்டுகள் காலத்தின் போது தேவையான வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் அக் கம்பனியால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கரும்பு பயிர்ச் செய்கைக் காணிகளைத் தயார்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகளின் கூட்டு மொத்தமான ரூபா 19,986,574 தொகையை மீளாய்வாண்டு வரையும் அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) விவசாயிகளுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதிகளின் கூட்டு மொத்தமான ரூபா 58,883,052 தொகையை மீளாய்வாண்டு வரையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழிற்சாலையில் அரைக்க கூடிய உச்ச அளவான கரும்பு 400,000 மெட்ரிக் தொன்களாக (ஒரு நாளுக்கு 2000 X செயற்பாட்டு நாட்கள் 200) இருந்தும் 2017/2018 ஆம் ஆண்டின் போது அரைக்கப்பட்ட கரும்புகளின் அளவு 169,940 மெட்ரிக் தொன்களாக இருந்ததனால் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாத இயலளவு 58 சதவீதமாகும் எவ்வாறாயினும், 2013 / 2014 ஆம் ஆண்டிலிருந்து 05 ஆண்டுகளுக்கான தரவுகளை ஒப்பீடு செய்து பார்த்த போது 2014/2015 ஆம் ஆண்டளவில் வருடாந்த கரும்பு வழங்குதல் 259,289 மெட்ரிக் தொன்களாக இருந்த போதிலும் 2017 / 2018 ஆம் ஆண்டளவில் அது 182,582 மெட்ரிக் தொன் வரை குறைவடைந்திருந்தது. கம்பனி ஆரம்பத்திலிருந்து மீளாய்வாண்டு வரை தொழிற்சாலையின் உச்ச அளவு இயலளவாகிய 400,000 மெட்ரிக் தொன்களை அரைப்பதற்குப் போதியளவான கரும்பு வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான முயற்சிகளை எடுப்பதற்கு

நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அதன் காரணமாக தொழிற்சாலையின் உச்ச அளவு இயலளவை செயற்படுத்துவதற்குப் கம்பனிக்கு முடியாதிருந்தது.

(ஆ) கம்பனியின் 05 ஆண்டுகள் தரவை ஒப்பீடு செய்து பார்த்த போது சீனி காய்ச்சும் சதவீதம் 2014/2015 ஆம் ஆண்டில் 8.1 ஆக இருந்தும் மீளாய்வாண்டளவில் 7.5 சதவீதம் வரை குறைவடைந்திருந்ததுடன் கம்பனியின் ஒரு கரும்பு மரத்தில் காணப்பட்ட சீனியின் அளவு படிப்படியாகக் குறைவடைந்திருந்தது. 2012/2013 ஆண்டின் பொது 10.9 சதவீதமாக இருந்த அது மீளாய்வாண்டளவில் 9.1 சதவீதம் வரை குறைவடைந்திருந்த போதிலும் அச் சதவீதத்தினை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2012/2013 ஆம் ஆண்டிலிருந்து 2016/2017 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகள் காலத்தில் ஒரு ஹெக்டெயரிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதான கரும்பு விளைச்சல் படிப்படியாக குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. 2014/2015 ஆம் ஆண்டின் போது கரும்பு விளைச்சல் ஒரு ஹெக்டெயருக்கு 74 மெட்ரிக் தொன்களாக இருந்த போதிலும் 2017/2018 ஆம் ஆண்டளவில் அது 65 மெட்ரிக் தொன் வரை குறைவடைந்திருந்தும் இந் நிலைமையை மேம்படுத்தவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 ஆளணி நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியின் நிரந்தர ஊழியர்கள் 182 நபர்களையும் ஒப்பந்த ஊழியர்கள் 649 நபர்களையும் உள்ளடக்கி மொத்த ஊழியர்கள் 831 நபர்களாகும். இந்த ஆளணியானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் முறைப்படியான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | தொழிற்படு மூலதன முகாமைத்தவம் | குறுங்கால கடன் பெறுதல் அதிகரித்தல் மற்றும் அதன் அடிப்படையில் அதிக வட்டி செலுத்துதல் சம்பந்தமாக கவனம் செலுத்தப்படாமை. |
| (ஆ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பழைய கடன் மீதிகள் அறவீடு செய்யப்படாமை |
| (இ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | சீனி காய்ச்சும் சதவீதம், ஒரு கரும்பு மரத்தில் காணப்படுகின்ற சீனியின் அளவு என்பவற்றை அதிகரித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை<br>தொழிற்சாலையின் உச்ச இயலளவினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) | பெறுகைகள் | பெறுகை வழிகாட்டிக் கோவைகள் பின்பற்றப்படாமை, கிரய மதிப்பீடு தொழில்நுட்ப மாதிரி, சேவை உடன்படிக்கைகள் என்பன ஏற்படுத்தப்படாமை. |